**வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான செயற்திட்ட வடிவமைப்பு முன்னேற்றம் - 2019**

---

வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான செயற்திட்ட வடிவமைப்பு முன்னேற்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 மார்ச் 17 ஆந் திகதிய PDA 6011-SRI ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றித்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடற்றொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் செயற்திட்ட அமுலாக்கல் மற்றும் கண்காணித்தல் பிரிவு செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகவும் காணப்படுகின்றன. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீன்பிடி துறைமுகங்கள், நங்கூரமிடல் தளங்கள் மற்றும் தரையிறங்கும் தளங்களை வடிவமைத்தல் என்ற கூறொன்றின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரமிடல் தளங்கள் மற்றும் தரையிறங்கும் தளங்களை விரிவாக வடிவமைத்து, மீன்பிடித் தொழிலுக்கு உட்கட்டமைப்பைத் தொடர்ந்து பயன்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 242.43 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 1.59 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 198.13 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 1.3 மில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 44.217 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 0.29 மில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 மார்ச் 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூன் 01 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்கான காலம் 2020 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 741,582 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வுத் தொகை கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் குறைத்துக் கூறப்படுதல் | மீளாய்வாண்டிற்கான அலுவலக உபகரணங்களிற்குரிய பெறுமானத் தேய்வுத் தொகை நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், பெறுமானத்தேய்வுக் கொள்கை எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | பெறுமானத்தேய்வைக் கணிப்பிடுவதற்கும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கும் பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட பதிவேடுகளிற்கும் இடையே ரூபா 1,169,422 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்குகளில் கணக்கிணக்கம் செய்யப்படாதுள்ள மீதி | 2018 ஆம் ஆண்டிற்கும் (ரூபா 67.491 மில்லியன்) 2019 ஆம் ஆண்டிற்கும் (ரூபா 31.32 மில்லியன்) உரிய மாதாந்த திறைசேரி செலவினத் திற்கு எதிரான பொதுப் பேரேட்டுச் செலவினத்தின் கணக்கிணக்கம் செய்யப்பட்ட மீதிகளின் அறிக்கை தரப்படுகின்றது. | பேரேட்டு மீதியுடன் திறைசேரி பதிவேடுகளை கால அடிப்படையில் கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் படி ஆலோசனை சேவையின் பௌதீக நிகழத்தக்கவையின் ஒப்பந்தப் பெறுமதியில் ரூபா 4,643,280 அல்லது 7.5 சதவீதமாகக் காணப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டம் இந்த ஆலோசனை ஒப்பந்தத்தை ரூபா 6,500,000 நிகழத்தக்க பெறுமதிக்கு கையளித்திருந்தது. | செயற்திட்டக் கால முடிவில் செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த குறிக்கோள்கள் அடையப்படாத போதிலும், செயற்திட்டக் கிரயம் வரம்பு மீறியதாக காணப்படலாம். | தற்செயல்களுக்கான ஏற்பாடு உள்ளடங்கலாக ஆலோசனைக்கான நிதிக் கிரயத்தின் வடிவம் ரூபா 6,500,000 ஆகும். அதனைக் கணக்கிடும் போது, பி.எம்.யூ வழ ங்கிய கிரய மதிப் பீட்டில் அது 7.5% க்கும் குறைவாக ரூபா 6,500,000 ஆக உள்ளது. ஆகையால், மொத்த கிரய மதிப்பீட்டிலிருந்து தற்செயல் ஏற்பாடு 3.75% அதாவது ரூபா 6,500,000 மட்டுமே யாகும். | கேள்விமனுவை வழங்குகையில், ஆலோசனை சேவையின் பௌதீகநிகழத்தக்கவை, செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் 12 வது பத்தியின் படி வரிசை அமைச்சில் நிறுவப்பட்டுள்ள செயற்திட்ட அமுலாக்க மற்றும் கண்காணிப்பு பிரிவினால் செயற்திட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்டம் ஒரு செயற்திட்ட இயக்குநரையும் மேலதிகமாக 04 பதவியினர்களையும் 2018 ஒக்தோபரில் தனித்தனியாக ஆட்சேர்த்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 வரை ரூபா 10,503,600 ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டக் கால முடிவில் செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த குறிக்கோள்கள் அடையப்படாத போதிலும், செயற்திட்டக் கிரயம் வரம்பு மீறியதாக காணப்படலாம். | 2018 ஆகஸ்ட் 22 ஆந் திகதியிட்ட AMP/18/ 1651/825/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், இந்த செயற்திட்டத்தை மீன்பிடி, நீரியல்வள மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஊடாக அமெ ரிக்க டொலர் 201.22 மில். கிரயத்தில் செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக பதவியினரை ஆட்சேர்க்காது, அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஊடாக செயற்திட்ட த்தின் நிர்வாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டச் செயற்பாடுகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டம் 2017 மார்ச் 20 அன்று அதன் நடவடிக்கைகளைத் தொடங்கி, 2018 ஜுன் 01 ஆம் திகதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டிருந் தாலும், அமைச்சரவையின் அங்கீகார மின்றி செயற்திட்டத்தின் செயற்பாடு களை நிறைவு செய்யும் திகதி கடன் வழங்கும் நிறுவனத்தால் 2020 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டக் கால முடிவில் செயற்திட்டத்தி ன் ஒட்டுமொத் தக் குறிக்கோ ள்கள் அடைய ப்படாது போக லாம். | எங்கள் கட்டுப்பாட் டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் முக் கியமாக தன்னார்வ தொண்டு நிறுவனங் களின் நலன்கள் காரணமாக பேசா லை மற்றும் பருத் தித்துறை மீன்பிடி துறை முகங்களை நடை முறைப்படுத்து வதற்கு எதிராக பல்வேறு கட்சிகளிட மிருந்து ஆட்சேப னைகள் வந்திருந் தமையால் செயற்தி ட்ட நடவடிக்கைக ளை பலமுறை நீடிக் கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிரு ந்தது. | மாற்றங்களுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியாக அறிவிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பேசாலை மற்றும் பருத்தித்துறை ஆகியவற்றில் மீன்பிடி துறைமுகங்கள் நிர்மாணிப்பு வடிவமைத்தலை உள்ளடக் கியிருந்தது. இருப்பினும், செயற்திட்ட த்தின் நோக்கம் மாற்றப்பட்டதன் காரணமாக, பணிகளை வடிவமைப் பதற்காக 2019 திசம்பர் 31 வரை ரூபா 18.6 மில்லியன் செலவிட்ட பின்னர் பேசாலையில் மீன்பிடி துறைமுகத்தின் வடிவமைப்பு 2019 இல் மீளப் பெறப்பட்டது. மேலும், பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்தின் வடிவமைப்பு களை மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் செயற்திட்டத்தால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் குறித்த பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டக் கால முடிவி ல் செயற்திட் டத்தின் ஒட்டு மொத்தக் குறிக்கோள்க ள் அடைய ப்படாது போகலாம். | பதிலளிக்கப்பட வில்லை. | மீள் வடிவமைப்புக்கான பொறுப்பை நிச்சயிப்பத ற்காக மாற்றத்திற்கான காரணங்கள் மேலும் விசாரணைக்கு உட்படுத்த ப்படுதல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| துறைமுக வடிவமைப்பு பொறியியலாளருடனான ஆலோசனை ஒப்பந்த உடன்படிக்கையின் படி, முறையே களப்பணிகள் மற்றும் வீட்டு / அலுவலக பணிகளுக்கு 75 நாட்கள் மற்றும் 30 நாட்கள் ஒதுக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், களப்பணிக்கு 38.73 நாட்களும், வீட்டு / அலுவலக பணிகளுக்கு 65.98 நாட்களும் மட்டுமே 2017 யூலை முதல் 2019 நவம்பர் வரையிலான காலப்பகுதியில் செலவிடப்பட்டு ள்ளன. இதன் விளைவாக, விரிவான வடிவமைப்பு குழுவினரால் மேற்கொள்ளப்ப டும் துறைமுகம் மற்றும் நங்கூரமிடல் தளங்களின் வேலைகளை மீளாய்வு செய்வதற்காக துறைமுக வடிவமைப்பு பொறியாளருக்கு போதுமான நேரம் வழங்க முடிந்திருக்கவில்லை என்பதுடன் திட்டமிடல் பணிகள் மற்றும் வடிவமைப்பு பணிகள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நியமங்கள் மற்றும் அளவுத்திட்டங்கள், தொழில்நுட்ப விவரக் குறிப்புகள் மற்றும் சிறந்த சர்வதேச நடைமுறைகள் ஆகியவற்றை பூர்த்தி செய்திருந்தமையினை உறுதிப்படுத்தவும் முடிந்திருக்கவில்லை. | செயற்திட்டக் கால முடிவில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தக் குறிக்கோள்கள் அடையப்படாது போகலாம். | சர்வதேச துறைமுக வடிவமைப்பு பொறியாளருடனான ஒப்பந்தத்தின் படி, வேலைத்தள மற்றும் வீட்டு/ அலுவலக விஜயத்திற்கான ஒரு நாளைக் குரிய கட்டணம் 785 அமெரிக்க டாலர் ஆகும். | துறைமுக வடிவமைப்பு பொறியாளருக்கு விரிவான வடிவமைப்பு குழுவினரால் மேற்கொள்ளப்படும் துறைமுக மற்றும் நங்கூரமிடல் தளங்களின் திட்டமிடல் பணிகளை மதிப்பாய்வு செய்ய போதுமான நேரம் வழங்கப்பட வேண்டும். . |